# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்
## தயாரிப்பு மற்றும் பணிகள்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2025 ஓகத்தில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிலும் விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றன**


**தயாரிப்பு கொ.மு.சு 55.2**

**2025 ஓகத்து**

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2025 ஓகத்தில் 55.2 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்தது.** முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வீதமாயினும் தயாரிப்பு நடவடிக்கைகளில் இது விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றது. அனைத்து துணைச் சுட்டெண்களும் மாதகாலப்பகுதியில் நடுநிலையான அடிப்படையான அளவிற்கு மேல் காணப்பட்டன.

மாதகாலப்பகுதியில் புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்களில் அதிகரிப்புக்கு உணவு மற்றும் குடிபானங்கள் தயாரித்தல் செயலாற்றம் பெருமளவில் காரணமாக அமைந்தது. புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளுக்கிசைவாக கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்ணும் விரிவடைதலைப் பதிவுசெய்தது. ஓகத்து மாதகாலப்பகுதியில் தொழில்நிலை துணைச் சுட்டெண் சாதகமான புலத்தில் காணப்பட்டு, சாதகமான தொழில்நிலைமைகளை எடுத்துக்காட்டியது. அதேவேளை, சில பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்ட சர்வதேச கப்பற்சேவையில் தாமதங்களினால் நிரம்பலர்களின் விநியோக நேரம் மாதகாலப்பகுதியில் தொடர்ந்தும் நீட்சியடைந்து காணப்பட்டது.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

*கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு*

| மாறி | யூலை | ஓகத் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **62.2** | **55.2** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 67.5 | 56.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 66.5 | 54.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 55.0 | 54.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 59.5 | 53.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 55.6 | 57.1 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வருட இறுதியை நோக்கி எதிர்பார்க்கப்படும் பருவகாலக் கேள்வியின் மூலம் பெருமளவில் துணையளிக்கப்பட்டு, அடுத்தவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்படுகின்றன.

### உலகளாவிய தோற்றப்பாடு:
கொமுசு தயாரிப்புத் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| ஐக்கிய அமெரிக்கா | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| ஐக்கிய இராச்சியம் | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2025 செத்தெம்பர் 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), கடந்த ஆண்டின் அதேகாலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட ஒரேமாதிரியான போக்கினைப் பின்தொடர்ந்து, 2025 ஓகத்தில் 68.9 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, பணிகள் நடவடிக்கைகளில் மேலும் விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றது.**

அநேகமான துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் துணையளிக்கப்பட்டு, 2025 ஓகத்தில் வியாபார நடவடிக்கைகள் தொடர்ந்தும் விரிவடைந்தன. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், ஏனைய தனிப்பட்ட சேவைகள் அத்துடன் உயர்வான சுற்றுலாப் பயணி வருகைகளுக்கு மத்தியில் அதிகரித்த தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் என்பவற்றில் வலுவான செயலாற்றத்தின் மூலம் விரிவடைதல் நிலையாகக் காணப்பட்டது. மேலும், கடன்வழங்கல் செயற்பாடுகளில் அதிகரிப்பினால் தூண்டப்பட்டு நிதியியல் பணிகளுடன் தொடர்புபட்ட வியாபார நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேம்பட்டன.

முதன்மையாக, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் அத்துடன் நிதியியல் பணிகள் தொடர்புபட்ட செயற்பாடுகள் எனபவற்றில் அவதானிக்கப்பட்ட விரிவடைதல் காரணமாக புதிய வியாபாரங்கள் 2025 ஓகத்தில் அதிகரித்தன.

முன்னெடுக்கப்படுகின்ற தொழிற்பாட்டு ரீதியான தேவைப்பாடுகளுக்கு துணையளிப்பதற்கு பல கம்பனிகளிலும் மேலதிக ஆட்சேர்ப்புக்களைப் பிரதிபலித்து, 2025 ஓகத்தில் தொழில்நிலை தொடர்ந்தும் அதிகரித்தது. எனினும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் நிலுவையிலுள்ள பணிகள் சற்று வீழ்ச்சியடைந்தன.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***


| மாறி | யூலை | ஓகத் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **70.1** | **68.9** | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 64.9 | 66.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 59.8 | 57.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 51.1 | 49.4 | - | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 80.7 | 79.3 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்து வருகின்ற மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகைகள் உள்ளடங்கலாக சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மற்றும் பருவகாலக் காரணிகள் மூலம் துணையளிக்கப்பட்டு தொடர்ந்தும் மேம்பட்டன.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2025 ஓகத்து**
**68.9**

கொ.மு.சு - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அண்ட் பி குளோபல்[1], 2025 செத்தெம்பர் 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அண்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.